ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

பிரியவாசகர்களே !

தற்காலத்தில் சிலர் நமது வைதிகமதத்தின் ஸ்வரூபத்தை நன்குணராமல் வேதம் புராணம் முதலியவை அப்பிரமாணமென்றும், அவை காலதேசவர்த்தமாஞதிகளை அனுசரித்து சுயநலங்கருதிய பிராம்மணர்களால் எழுதப்பட்டனவென்றும், வேதத்தில் விதிக்கப்பட்ட காரியங்களுக்கும் புராணுதிகளால் கூறப்பட்டகாரியங்களுக்கும் பலவித விரோதமிருக்கின்றதென்றும் ஜாதி வர்ணுச்ரமபேதம் பிறவியாலேயல்லவென்றும், சிராத்தம், ஸ்னுனம், ஸந்தியாவந்தனம், ஜபம் முதலிய நித்யகர்மாக்களும் மற்றும் உள்ள ச்ரௌத கர்மாக்களும் பிரயோஜனமற்றவைகளென்றும்; விதவா விவாகம் தருணீ பரிணயம் முதலிய காரியங்களைப்பரவச்செய்யவேண்டுமென்றும், ஸர்வேச்வரனொருவனில்லையென்றும், எவ்விதத்திலும் வைதிகமதம் ஸரியல்லவென்றும் இவ்வாருக தூஷித்து மேனுட்டு நடையுடைபாவனைகளையே கீழ்நாட்டிலும் நிலைபெறச் செய்ய முயற்சித்திருப்பதுபோல் பம்பாய் நகரவாசியாகிய சர்மா என்பவரொருவர் நமது மேன்மைதாங்கிய வைதிகமதத்தில் அனேக தூஷணங்களை ஆரோபித்து முன்னுக்குப்பின் விரோதமாக எழுதியுமிருக்கிருர். அவரப்படி மேனுட்டு வாசனையால் தூஷித்து எழுதியிருக்கும் விஷயங்களுக்கு ஸமாதானங் கூறுவது அவச்யமில்லை என்று ஆர்யதர்மப் பத்திரிகையை ஒவ்வொரு வாரத்திலும் விடாமல் வாசிக்கும் நேசர்களுக்குத் தோன்றலாமென்ருலும் சர்மாவுடைய மதிமயக்கம் விலக்குவதற்காகவாவது வைதிகமதாக்ஷேப ஸமாதானமவசியமானதுபற்றி, ஸ்ரீமடம் உபன்யாஸகராகிய பிரும்மஸ்ரீ வி. ஜகதீச்வரசாஸ்திரிகள் அவர்கள் சர்மாவின் ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் எழுதியிருப்பதால் அவ்வுபன்யாஸகரால் வெளியிடப்பட்ட ஸமாதான வசனங்களைக் கூடிய சீக்கிரம் யாவருக்கும் உபயோகமாகும்படி இவ்வார்யதர்மத்தில் வெளிவரலாமென்று நம்பப்படுகின்றது.

சுபம் !

பத்திராதிபர்.

சிராத்தத்தில் சிலரது ஆசங்கை.

(310-வது பக்கத்தொடர்ச்சி.)

சுக்ரநீதி 41-வது ச்லோகத்தை இதுவிஷயத்தை உத்தேசித்து நோக்கவும். நம் வேதமும் புராணங்களும் ஸ்மிருதிகளும் எல்லாவிதமான நீதிகளும் இந்தவிதமாக ஒரே தொனியுடன் சிக்ஷையையும் அறிவையும் புகட்டும்போதும் எவர் ரொம்பவும் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவரோ அந்த வியாசர் வேதத்தைப் படித்ததாகத் தெரிவிக்கும்போதும் ஏன் நாம் நம்மைச்சேர்ந்த சகோதரர்களான க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் என்ற இம்மூன்று வர்ணத்தாரும் படித்து ஞானத்தை அடையாவண்ணம் இந்த புராணவாக்கியங்களை நம்பி அநேக சகோதரர்களை மூடர்களாகச் செய்துவிட்டோம். இவ்விதம் செய்ததற்கு புராணமல்லவோ காரணம்? ஹா! ஹா! அநேகவிதமான கெடுதியையும் அறிவின்மையையும் ஏற்படுத்துவதற்குக் காரணமான இந்த புராணங்கள் சுயநலம் கருதிய முன்காலத்திய பிராமணர்கள் பெரிய மகான்களாகிய வியாசர் முதலானவருடைய பெயரை இட்டு நமக்கு உண்மையான வழியைக் காண்பிவிக்காமல் தங்களுடைய சுயநலத்தைக்கருதி தாங்களும் கெட்டதல்லாமலும் மற்ற மூன்று வருணத்தாரையும் மூடர்களாகச் செய்துவிட்டார்கள்.

(19) கீழ்க்கண்ட விநோதமான பிரமாணங்களையும் புராணங்கள் யாவும் உண்மையான ஞானத்தை அடைவிக்கக்கூடாதபடி செய்ததற்கு உதாரணங்களை வடதேசத்து பிராமணர் தெரிவிக்கிறார். அதாவது—

வேதத்தில் மாம்சத்தையும் லாகிரிவஸ்துக்களையும் உபயோகிக்கக்கூடாதென்றும், சூதாடக்கூடாதென்றும் அறிவிக்கப்படு

கிறது. புராணத்திலோ யக்ஞத்தில் குதிரை, பசு, ஆடுமுதலானவை களுடைய மாம்சத்தைப் புசிக்கலாம் என்றும், தினந்தோறும் தேவதையென்றும் காளியென்றும் பெயரைச் சொல்லி சாராயம், மாமிசம் முதலானதுகளை ஆகாரமாக உண்ணலாம் என்றும் தெரிவித்ததனாலன்றோ இன்றையதினம்கூட ஆடு, மாடு, கிடா, குதிரை முதலிய பிராணிகள் கொல்லப்படுகின்றன. பெரிய ஞானவான்களும் (நாரதர்போன்ற ரிஷிகளும்) மாம்சம் சாப்பிட்டதாகவும், இன்றையதினம் கூட அநேகம்பேர் கொண்டாடும் அந்த பெரிய கடவுளாகிய சிவபெருமான்கூட தன்னுடைய சம்சாரத்துடன் (பார்வதியுடன்) சூதாடியதாகவும், மேற்கண்ட சூதாட்டத்தில் பாமசிவன் தோற்றுப்போனதாகவும், அதனாலேயே எல்லாவற்றையும் துறந்துவிட்டார் என்பதாகவும் புராணங்களிலிருந்து அறிவதனாலன்றோ நம்முடைய நண்பர் அநேகம்பேர் சூதாட்டமாகிய கெட்ட காரியத்தை விடமாட்டேன் என்கிறார்கள். ஹா! ஹா! என்ன புராணத்தின் சிக்ஷையின் பெருமை!

(20) திருடல், உபத்திரவித்தல் மற்ற இந்தவிதமான காரியங்கள் கெட்டதென்றும், பொய்சொல்லக்கூடாதென்றும் வேதத்தில் சிக்ஷை கொடுக்கப்பட்டிருக்கிறது. புராணத்திலோ பெரிய மஹான்களும் தபஸ்விகளும்கூட இந்தவிதமான காரியங்களைச் செய்ததாகத் தெரியவருகிறது. உதாரணமாக லிங்கபுராணம் அத்-5-ல் பார்க்கவும். மேற்கண்ட புராணத்தில் அம்பரீஷராஜாவின் புத்திரியின்மீது ஆசையினால் நாரதமுனி பர்வதமுனி இரண்டு மஹான்களையும் ஏமாற்றி ஸ்ரீமதி என்னும் பெண்ணைத் தூக்கிக்கொண்டு விஷ்ணுபகவான் தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹா! ஹா! என்ன ஆச்சர்யம்! எவரை நியாயவான் என்றும் ஞானஸ்வரூபீ என்றும் எல்லோரையும் காற்று ஆகாராதிகளை அளித்து பரிபாலிக்கும் பிதா என்றும் கருதப்படுகிறவருடைய குணம் நிரூபிக்கப்பட்டிருப்பதைச் சற்று சிந்திக்கவேண்டியது அவசியம். வேதம் நம்முடைய கடவுளைப்பற்றி என்ன விளக்குகிறது? ஹா! ஹா! என்ன புதுமை! என்ன விரோதம்! பெரிய மகாபுருஷர் இந்தவிதமான அநீதியான காரியங்களைச் செய்தார் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. ஏ என்னுடைய சகோதரர்களே! ஏ என்னுடைய பூஜநீயகுருவே! நான் எந்தவிதம் இப்படியாகப்பட்ட கட்டுக்கதைகளை நம்பட்டும்.

மேலும் கீழ்க்கண்ட புராணங்களின் அத்புத கட்டுக்கதைகளையும் சுயநலத்தையே கருதிய சொற்பகாலத்திற்கு முன்னிருந்த வித்வான்களின் புத்தியின் விசேஷத்தையும் எப்படியுரைப்பேன்! பிரதிமையை எவ்வாறு நாடகத்தில் ஆட்டிவைக்கிறார்களோ, அதே மாதிரி நாம் நம்முடைய அறிவின்குறைவினால் ஆட்டும் வழியெல்லாம் ஆடும் பிரதிமை ஆய்விட்டோம்.

(21) வேதத்தில் ஸ்திரீகள் தங்களுடைய முக்யவேலையைச் செய்து முக்திக்கு மார்க்கத்தை அடைவதற்கு அவரவர்களுடைய புருஷர்களைப்பூஜிக்கவேணுமென்றும், சிச்ருஷை முதலியவைகளைச் செய்யவேண்டுமென்றும், இஃதன்றி வேறு வழி கிடையாதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

புராணமோ கங்கா கயா முதலிய விசேஷவிடங்களுக்கு போவதனாலும் ஸ்வகபோலகல்பிதவிருதங்களையும் உபவாசங்களையும் அனுஷ்டிப்பதனாலும், விருக்ஷாதிகளைப் பூஜிப்பதனாலேயும் முக்தி அடையலாம் என்றும் தெரியப்படுத்துகிறது.

(22) நல்ல ஸ்நேகிதர்களையும் ஞானவான்களையும் அடைந்து இந்த ஸம்ஸாரமாகிய கடலைத்தாண்ட உத்தேசித்து ஞானவான்களாகிய மானுஷிகளை அடைந்து அவருடைய பாதாரவிந்தங்களை ஸேவிப்பதே தீர்த்தஸேவை அதுதான் இக்கடலைத் தாண்டுவதற்குச் சாதனமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்திலோ இடத்தின் விசேஷத்தையே (காவேரி, கங்கா, சிந்து முதலிய நதிகளை) தீர்த்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(23) வேதத்தில் உண்மையை அறிந்து காலாகாலங்களையனுசரித்துச் செய்துவரும்படியான காரியத்திற்குத் தபஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்திலோ நாலுபுறமும் நெருப்பைப் போட்டுக்கொண்டு மத்தியில் உட்கார்ந்திருப்பதே தபஸ் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(24) வேதத்தில் எந்த எந்த காரியங்களை எப்போ செய்துவரவேணுமோ அப்பப்போ செய்துவருவதற்கும் அதை நன்கு தெரிந்து செய்துவருவதற்கும் விருதம் என்றும் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்திலோவெனில் ஏகாதசி என்றும் செவ்வாய் என்றும் வெள்ளியென்றும் அந்ததினங்களில் ஆகாராதி

கள் செய்யாமலிருப்பதற்கு அந்தப்பெயரிடப்படுகிறது. அதனால் அநேகவிதமான பொய்யான பலன்களைத் தெரிவித்திருக்கிறது.

இம்மாதிரி ஆகாராதிகள் செய்யாமலிருப்பதற்கு விருதம் என்று பெயரைத் தெரிவித்ததோடு இராமல் அதனால் அநேகவித மான பாபங்களை நிவர்த்திக்கலாம் என்றும், மாதாபிதாக்களையும் கூட மோக்ஷத்திற்கு அடைவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட் டிருக்கிறது. ஏ என் பிரபுவே' இது எவ்வளவு உண்மையான வாக்கியம் என்று நம்புவது. அப்படியாகப் பட்டினி கடந்ததனா லேயே மோக்ஷமடையக்கூடுமென்றால் தவத்திற்கும் ஞானத்திற் கும் என்ன அவசியம் என்பதை விசாரிக்கவும். இந்த விருதங் கள் எண்ணிறந்தவைகள் இருக்கின்றன. எவை செய்யத்தகுந் தவை எவைகள் விடக்கூடியவைகள் என்பதை அவாவாளுடைய புத்திக்கு அனுசாரம் செய்துவரவேண்டியதுதான்போலிருக் கிறது ஹா! ஹா! என்ன கணக்கற்ற கதைகள். நிஜக்கலப்பற்ற இந்தக் கட்டுக்கதைகளை எப்படி விவரிப்பேன்?

(25) வேதத்தில் கர்மானுகூலம் பலனை அனுபவித்தே தீர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்திலோ விரு தங்களைச் செய்வதனாலும் கயா காசிமுதலிய இடங்களில் பிண்ட தானங்களினாலும் தாங்கள் செய்யும் நாகாதிபாபங்களிலிருந்து மீளுகிறதுமல்லாமல் மாதாபிதாக்களையுங்கூட அநேகவிதமான பாவங்களிலிருந்து மீட்டுவைத்து முக்தியடைவிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தவிதமாக ரொம்பவும் சுலபமாகவே கர்மத்தைஒட்டி அனுபவிக்கும்படி செய்யாமலிருக்கும் ஈசனை எப்படி நியாயகாரி என்று சொல்லக்கூடும்? அதையே உண்மை யாகவும் எடுத்துக்கொள்ளவும் கூடவில்லை. நம் கண்எதிரிலேயே ஒருவர் தனவானாகவும், ஒருவன் தரித்திரனாகவும், ஒருவன் ரோகி யாகவும், ஒருவன் ஆரோக்யவானாகவும் ஒரே வயிற்றில் பிறந்த நாலு பிள்ளைகளும் நாலுவிதமாகவும் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் யாதென்று சிறிது யோசிக்கவும்.

(26) வேதத்தில் மனுஷ்யாளுக்கு அதிகத்தில் அதிகம் ஆயுள் 400-வயதென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புராணத்திலோ ஆயிரக்கணக்காகக் கூறப்பட்டிருக்கிறது.

(27) வேதத்தில் பரமேச்வரர்சச்சிதானந்தசொரூபிஎன்றும், ஜன்மமே எடுக்காதவர் என்றும் விகாரங்களையே அடையாதவர்

என்றும், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், சரீரமற்றவர் பரிசுத்தர், நியாயகாரி என்றும், அழியாதவர், ஜீவராசி அனைவற்றிற்கும் கர்மத்திற்கு அனுகூலமாகவே பலனை அளிப்பவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்தில் சரீரத்தோடிருப்பவர், விகாரங்களை அடையக்கூடியவர் என்றும் தன்னுடைய பக்தனை காக்கும்பொருட்டே மச்ச கச்சப அவதாரங்களை எடுத்தார் என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

(28) வேதத்தில் ஈச்வான் சர்வசக்திமான் என்றும் அவர் தன்னுடைய சக்தியினாலேயே பூலோகத்தில் எல்லாகாரியங்களும் செய்யப்பட்டுவருகின்றனவென்றும் தெரிவிக்கிறது. புராணத்திலோ இதற்கு விரோதமாக விதம்விதமான காரியங்களும் விரோதமாகவே அநேக காரியங்கள் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(29) வேதத்தில் ஒரு புருஷருக்கு ஒரே மனைவியை அடைய வேண்டுமென்றும் ஒரே புருஷனையே ஒரு ஸ்திரீ கல்யாணம் செய்துகொள்ளும்படியாக சிக்ஷை கொடுக்கப்பட்டிருக்கிறது. புராணத்தில் மனதில் தோன்றியபடி வேணுமென்கிற ஸ்திரீகளை விவாகம் செய்துகொள்ளலாமென்றும் ஸ்ரீகிருஷ்ணர் 16108 ஸ்திரீகளை மணம்புரிந்து லீலைகள் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டதனாலன்றோ தற்காலத்திய சிறுவர்களும் சிறுமிகளும் மனம் போனபோக்கெல்லாம் செய்துவருகிறதற்கு ஒருபிரமாணம்போல் தெரிவிக்கவும் செய்கிறார்கள். ஹா! ஹா! இப்படியாகப்பட்ட புராணத்தினால் நாம் என்ன நன்மையை நாடி அதை பெரும் வேதத்தைவிட முக்கியமாகநினைத்து அதை அனுசரிக்கவேணும். இதுவிஷயத்தில் இன்னும் வேண்டிய பிரமாணங்கள் கொடுக்கக்கூடும். ஹே என் ஞானகுருவே! மேலே சொன்னபடியெல்லாம் என்னுடன் தர்க்கம் செய்த வடக்கத்திய பண்டிதர் சொல்லுவதெல்லாம் எனக்குஉண்மையையாகவேதோணுகின்றது. மேலும் தங்களுடைய உத்திரவையும் இந்த விஷயத்தையும் சிராத்தம்என்றால் எப்படி மாதாபிதாக்களுக்கு போய்ச்சேரக்கூடும் என்பதையும் விவரமாகதெரிவிக்கவும். மற்றபடிவடக்கத்தியபண்டிதர்சொல்வது உண்மையென்றாலும் அந்தப்படியே ஏன் இனி செய்துவரவேணும். அதனுடைய சம்மதத்தை தெரிவிப்பதுமல்லாமல்

தாங்களும் இந்த அக்ஞானத்தினுல் ஏற்பட்டிருப்பதை விலக்கி வேதத்தைப் பிரசாரம்செய்து அடியேனையும் என்னைப்போன்ற அனைவரையும் அக்ஞானத்தினுல் மூடப்பட்டிருக்கும் தன்மையி லிருந்துவிடுவிக்க இந்த ஞானக்கண்ணைத்திறந்து அந்தசூர்யனைப் போன்ற அந்த பிரகாசமயமான கடவுளைப்பார்க்கும் வேதமாகிய சக்தியினுலடைய அருளவேணுமாக பிரார்த்திக்கிறேன்.

வேதத்தையும் வைதீகதர்மத்தையும் எடுத்து தென்குமாறி யிலிருந்து வடதேசம்வரையிலும்மானிடஜன்மத்தைவிட்டுஞானத் தினுல் முக்தியை அடையும்படிக்கும் பிருமண, க்ஷத்திரியர் வைசி யர், சூத்திரர்கள் அவரவர்கள செய்வதனுலேயே கர்மத்தை விசே ஷமாக எடுத்துறைத்து இந்தஜம்பூத்வீபம் முழுமையும் சாந்தியை யும் கடவுளை பணிவதற்கு உண்டான உண்மையான வழியைத் தெரிவித்த அந்த மஹாத்மாவின்பீடத்தில் எழுந்தருளியிருக்கும் தாங்கள் என்மீது கிருபைகூர்ந்து மேலேகண்ட சிராத்தவிஷயத் தைப்பற்றியும் அதன் உண்மையையும் தெரிவித்து அடியேனை கரையறியாமல் தத்தளிக்கும் இம்மனதிற்கு எக்காலமும் சந்தோ ஷத்தையடையும்படியாகவும்ஈசனுடையபாதாரவிந்தங்களிலேயே வசிக்கவும் அதற்கு வேண்டிய உண்மையான சிக்ஷையையும் அளிப்பீர்கள் என்று நம்பி இவை எழுதலானேன். அடியேனுக்கு இதைத்தவிற இன்னும் அநேக விஷயங்களில் சந்தேகங்களிருக் கின்றபடியால் இந்தவிதஅக்ஞானத்தினுல் ஏற்பட்டசந்தேகங்கள் யாவும் தங்களைப்போன்ற ஞானஜோதியினுல் இருளைப்போக்கி ஞானமென்றும் பிரகாசத்தை அளிக்கவேணுமாகவும் பிரார்த்திக் கிறேன்.

சுந்தரேச சர்மா, பம்பாய்.

வைதிகஸ்வாராஜ்யம்.

நான் முற்கூறியபடி இப்போது இந்தியர்களான நாம் எவ் விதமிருக்கிறேம்? நாம் தொன்றுதொட்டு எது செய்துவந்தோம்? எது இப்போது நம்மைவிட்டகன்றது என்பதை கவனிக்கவேண் டிய அவசியம் நேர்ந்தமையால் முன் மேற்றிசைப்படிப்புப்படித்த நம்மாணுக்கர்கள் மேற்றிசையார்களுக்குஉதவிசெய்யவே இன்று

கதறுகிறார்களென்றும் அவர்கள் கோரும் ஸ்வாராஜ்யம் நம் இந்தியாவுக்கு அனர்த்தஹேதுவாகுமென்றும் ஸாமான்யமாய்க் கூறினேன். இப்போது அதன் பிரகாரத்தைக் கூறுகின்றேன்.

நம் இந்தியாவின் வித்தை ஸம்ஸ்கிருதத்திலும் தேசபாஷையிலும் தான் இருந்தது. நம் ஆர்யமதம் வளரும்படி செய்வதும் மாணாக்கர்களுக்கு ஆசாரம் அனுஷ்டானம் பக்தி பயம் பெரியோர்கள் தெய்வத்தினிடம் வணக்கம் முதலியவைகளைத்தான் கற்பிப்பது வழக்கம். வர்ணாச்ரமதர்மப்படி அவரவர்கள் தவறாது நடப்பது மிகவும் முக்கியம். அதையே சாஸ்திரமென்றும் அதைத் தவறுதல் பாபமென்றும் அதனால் வர்ணங்கள் சேர்ந்து சீர்குலைந்து உலகத்தில் கலகத்தை உண்டுபண்ணி ஒருவரையும் சுகமாய் வாழவொட்டாதென்றும் நினைத்தார்கள். கீதாசார்யார் கீதையில் இந்த தர்மத்தைத்தான் உபதேசித்தார் என்பது அதைச்சாமான்யமாய்ப் படிப்போருக்கே விளங்கும். இவ்விதம் கற்கும் நான்கு வருணத்தவர்கட்கும் அவரவர்கள் முறைக்குத்தக்கவாறு குருகுல நியமமுண்டு. இவ்விதம்கற்கும் மாணாக்கர்கள் குருவினிடமிருந்து வித்தை கற்றுமுடியும்வரை அவர்வசத்திலிருந்து அவர் சொல்லும் எவ்வசனத்தையும் ஆக்ஷேபியாது அவ்வாறே நடந்துகொண்டு அனுக்கிரகத்தாலேயே சகல கலைகளையுமடைந்துவிடுவார்கள்.

नामृष्टो बिंबमादर्शो नाप्यलीढो मणिर्द्युतिम् ।
प्राप्नोति नाप्यशुश्रुषुः शिष्यो गुरुगताः कलाः ॥

துடைக்கப்படாத கண்ணாடியில் பிம்பம் தெரியாது சாணையிடப்படாத ரத்தினம் ஒளியை அடையாது பணிவிடைசெய்யாத சீடன் குருவினிடமுள்ள வித்தையைப்பெறமாட்டான் என்றபடி குருசுச்ருஷையால் ஸமஸ்தவித்தையையும் அடைவான் என்பது நிச்சயம். இவர்கள் புசிப்பதற்காக பிக்ஷையெடுப்பார்கள். அதுவும் தன் வயிறளவுக்குத்தான். இத்தகைய மாணாக்கர்களையுத்தேசித்து தீண்டல்முதலியன கிடையாதென்று வைத்தார்கள். இவர்கள் பிர்மசாரிகள், இப்பதத்திற்கு வேதம்முதலியன கற்க விரதம் பூண்டவர்கள் என்று பொருள். இவர்களுக்கு லோகவ்யவகாரம் தெரியக்கூடாது என்பது நியமம். இவர்கள் உடுத்துவது 4முழத் துண்டுதான், படுப்பது தரையில், க்ஷெளரம் கிடையாது, ஸ்னானம்

சுத்தமான புண்யதீர்த்தத்தில், ! ஸோப் என்பது மண், இவர்கள் பல்துலக்குவதற்கு மாவிலை கருவேல் முதலிய மரத்தின் குச்சி. இது மிக புராதன தர்மசாஸ்திர கதையென்பார்களாயினும் தற்காலத்திலும் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளிடமும் சில காணப்படும். ஸோப்தேய்த்துக்குளித்தல், தானே க்ஷவரம்செய்து கொள்ளல் கண்டவிடத்திலுண்ணல் முதலியதை பஞ்சமஹாபாதகம்போல் எண்ணுவார்கள். குருகுலவாஸமென்று காட்டில் போய்ச் செய்யாவிடினும் பாடசாலையிற் கற்கும் மாணவர்கள் குருவினிடம் எதிரில் நின்றுபேச இன்னும் துணியவில்லை. அவர் எதிரில் மேல்வேஷ்டியுடன் நிற்கமாட்டார்கள்.

अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्धन्ते आयुः प्रज्ञा यशो बलम् ॥

வணங்கும் ஸ்வபாவமுடையவனும் எப்போதும் பெரியோர்களை ஸேவிக்கிறவனுமான ஒருவனுக்கு ஆயுஸ், பிரக்ஞை கீர்த்தி பலம் ஆகிய நான்குவளரும் என்ற உபதேசத்தை நன்கு அனுஷ்டிப்பார்கள். இவர்கள் அன்யதேசசாமானை உபயோகிக்கவேமாட்டார்கள். இவ்விதம் கற்று பெரியோர்களான மகான்கள் இப்போதும் இவ்விந்தியாவில் பலர் இருக்கின்றனர். இவர்களாற் கற்பிக்கப்படும் மாணுக்கர்களும் பலர். இவர்கள் தேசாந்தரம் செல்வதைப் பாபமென்றும் அவர்களோடு உண்ணல் இன்னும் பாபமென்றும் நினைக்கிறார்கள். இத்தகையோர் இந்தியா கெட்டுவிட்டதே. நம் தேசம் எவ்விதம் முன்போலாகும். நம் தேசத்தைக்கெடுக்கும் இப்படிப்பு எப்போது முடிவடையும்? நம்படிப்பு எப்போது வளர ஆரம்பிக்கும்? என்று கவலைப்படுகிறார்கள். இப்படிப்பு படிக்காதவர்களும் ஸ்வாராஜ்யம் வேண்டுமென்கின்றனர். ஆகவே இருவரும் கூறுவது இந்தியஸ்வாராஜ்யம்தானென்றாலும் இதில்வித்தியாஸம் இல்லையா? நம்முன் இவ்விரண்டு பிரிவோடு நின்றுவிடவில்லை. பல கிளைகளாய்ப் பிரிந்து ஒரு சங்கத்தோர் மற்றவரை இகழ்ந்து கொண்டு அவரவர்கள் கேட்கும் ஸ்வதந்திரம் பலவகைப்பட்டதாய் ஆகின்றன. இப்பலவகைகளை ஒன்றுபடுத்தாமல் சீமையில் நடக்கும் வட்டமேஜைக்கூட்டத்திற்கு ஒருசாரார்மட்டிலும்போய் உட்கார்ந்து தங்கள் மனோபீஷ்டப்படி காரியத்தை முடித்துவந்துவிட்டால் அதை யாவரும் நல்லதென்று வரவேற்பார்களா? ஆகவே நாம் எல்லோரும் ஒருமனப்பட ஒருவரையொருவர் இக

றாமல் கலந்து கூடவேண்டும். கலந்து கூடுவதென்றால் சரீரக் கலப்பல்ல, மனக்கலப்பு என்று பன்முறை என் வாசகத்தில் கண்டிருப்பார்கள். இப்போது இந்தியாஸ்வாராஜயத்திற்கு வழி கதரும் கள்ளுக்கடை மறியலும் பிறகு வரி கொடா இயக்கமும் தான் முந்தியவை என்று காங்கிரஸ் வாதிகள் கூறுகின்றனர், அதை அனுஷ்டிப்பதற்கே பிடிவாதமாய்ச் சிலர் ஆரம்பித்ததிலிருந்து தற்போது நமக்கும் ராஜாங்கத்தாருக்கும் சிற்சில தடங்கல்களேற்பட்டிருக்கின்றன. இது ஒருவழிதானெனினும் வைதிகர்கள் இதையே முக்கியமாக ஏற்க பின்வாங்குகின்றனர். அதன் காரணம் இது. வைதிகோத்தமர்களான பலர் இப்போதும் வழங்கும் கதரை உடுத்த அசக்தர்கள். ஏனெனில் பல பெரியோர்கள் புதுவஸ்திரம் வாங்கியதும் வெளுக்கப்போட்டபின் அவ்வஸ்திரங்களை உடுத்தி பிரதிதினமும் அதிகாலையில் தலைமுழுக நதிக்கோ குளத்திற்கோ சென்று தலைமுழுகி நித்தியகன்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வஸ்திரத்தை தாங்களே துவைத்துக்கொண்டு சுத்தமான இடத்தில் காயவைத்து உடுத்துவார்கள். இவர்கள் அவ்வஸ்திரம் கிழியுமட்டும் தாங்களே சுத்தம்செய்வார்களே தவிர அடிக்கடி வண்ணானிடத்தில் போடமாட்டார்கள். கந்தையானாலும் கசக்கிஉடுத்து என்ற மூதுரையைப்பரிபாலிப்பவர் இவர்களே. தவிர இடுப்பில் 10முழவேஷ்டியும் அங்கவஸ்திரம்6முழமும் கட்டுவார்கள். இவ்வளவு பெரிய வேஷ்டி தற்காலம் கதரில் போட்டால் உடுத்தவாவது தண்ணீரில்நனைத்தால் தூக்கவாவதுமுடியுமா? ब्राह्मण: सूक्ष्मं निर्मलञ्च वस्त्रंधारयेत् பிராமணன் லேசாயும் அழுக்கற்றதுமான வஸ்திரத்தை உடுத்தவேண்டுமென்பது சாஸ்திரோபதேசம். ஆனால் இவர்கள் அன்யதேசஆடையையே கட்டாமல் நம்தேசத்தில் நெய்யப்பட்ட வஸ்திரத்தையாவது உடுத்துவது என்ற நியமத்தைக் கைப்பற்றவேண்டும். இதில் லௌகிகர்களெனப்படுவோர்திருத்திக்கொள்ளவேண்டியவிஷயம்ஒன்றுண்டு. அவர்கள் மேற்றிசைப்பழக்கத்தால் ஒவ்வொருவரும் தனக்கு இவ்வளவுதான் போதுமென்றவரையறை இல்லாமல் துணிகளை உபயோகித்துவருகிறாகள். அதாவது ஒருவன் சட்டைவகைறுக்களை ஏராளமாய் வைத்துக்கொள்கிறான். 2தினத்திற்கு ஒருமுறை அவைகளைக் கழிக்கிறான். அவ்விதம் கழித்து குவியலாய் ஆன பிறகு வண்ணானிடம் முன்போட்ட ஓர் பொதியைக் கழுதையில்

ஏற்றிக்கொண்டுவந்து தள்ளுகிறான், அதை உடுத்துகிறான், இவ் வழுக்குகளைக் கொண்டுபோகிறான். பம்பாய் கல்கத்தா முதலிய விடங்களில் பெரிய அந்தஸ்துள்ள கோடீசுவரர்கள் தங்களுடைய வஸ்திரம் சட்டைவகைறுக்களை சீமையில்தான்வேறாகப்போடுவார் களாம். அவைகள் கப்பலில் போவது எவ்வளவு? சீமையில் வெளுத்து இந்த கனவான் தேசத்திற்குத் திரும்பும் மூட்டை எவ்வளவு? இந்த பிரபுவின் கையிருப்பு எவ்வளவு? இவர் அழுக் காய் குவிப்பது எவ்வளவு? இவைகளைக் காப்பாற்ற எத்தனை பீரோக்கள் வேண்டும்? சட்டைகளின் மடிப்பு கசங்காமலிருப் பதற்காக பீரோக்கள் என்னென்ன தினுஸாய்ச்செய்யப்பட்டிருக் கும்? அவ்வஸ்திரங்களைப் பூச்சிஅடிக்காமல் இருப்பதற்காக அதற்கு வாஸனைசாமான் எவ்வளவு? அச்சாமான்எங்கிருந்து வரு கிறது? வண்ணானுக்குக் கூலி என்ன? அவன் வெளுக்க வாங்கும் சோப் முதலிய சாமான்கள் எங்கிருந்து கிடைக்கின்றன. இவ் விதம் யோசிக்காமல் அனுவசியமாய் உடுப்பதில் வீணானசெலவை குறைக்க வழி யாது? அதை முதலில் செய்துகொள்ளாததால் இந்த நிலைமையில் கதர் உத்பத்தியை அல்லும் பகலும் ஓயாது செய்தபோதிலும் நமக்குப் போதாது. இப்போது சீமைத்துணி யும் ஜப்பான்முதலியதேசத்துணியும் ஏராளமாய் இயந்திரங்களைக் கொண்டு உத்பத்திசெய்யப்பட்டு நம் தேசத்தில் வந்து குவிவதால் சரியாகிறது. இனியும் நாம் அளவின்றி உபயோகப்படுத்தினால் நம் தேசத்திலும் இயந்திரங்களின் உதவியால்தான் ஸப்ளைசெய்ய முடியும். அவ்விதமாகும்போது வஸ்திரமூலமாய் அவர்களிடத்தில் போய்க்கொண்டிருந்த பணம் யந்திரம் வாங்கவும் வாங்கின யந்தி ரம் பழுதுபார்ப்பதற்குமென்று போய்க்கொண்டிருக்கும். ஆகவே இவ்விதமாய் குறைக்க வழிதேடலாம். அவரவர்கள் மிதமாய்ச் சட்டைதுணி வைத்துக்கொள்ளலாம். கூடியமட்டிலும் நாமே தோய்க்கலாம், இதனால் ஆரோக்கியம் வளரும்,வண்ணான் பலாது வஸ்திரங்களோடு நம் வஸ்திரத்தையும் சேர்த்து ஆவியிலிடுகிறான். ஒவ்வொருவனுக்குச் சொல்லவொண்ணா வியாதி இருக்கும். ஆகவே அது எல்லா வஸ்திரத்திலும் வியாபிக்கும். அது தொற்று வியாதிக்குக் காரணமாகாதா? வைதிகர்கள் அந்த வஸ்திரத்தைக் கைபடாமல் வாங்கி நீரில் நனைத்துத் தோய்த்து காயவைத்தபின் தான் உடுக்க ஆரம்பிக்கிறார்கள். நம் லௌகிகர்கள் அப்படியே

வாங்கி உடுத்துகிறார்கள். ஆதல்பற்றியே அவ்விதம் செய்வோருக்கு அடிக்கடி புதிதுபுதிதாய் வியாதி உண்டாகிறது. தவிற நம் தேசத்திற்கு இவ்வளவு சட்டையோ துணியோ வேண்டியதே இல்லை. நம் தேசசிருஷ்டி அந்ததேசங்களைக்காட்டிலும் பலவகையிலும்வேறு. அந்ததேசம்எப்போதும்சகிக்கமுடியாதகுளிர்உள்ளது ஆதல்பற்றிஎல்லாஅங்கங்களையும்மூடிக்கொள்கிறார்கள். நம் தேசம் ஸமசீதோஷ்ணமுள்ளபடியால் இடுப்புவஸ்திரமும் அங்கவஸ்திரமும் போதும். அவ்வங்கவஸ்திரத்தையும் குருக்களையும்பெரியோர்களையும் தேவனையும் காணும்போது இடுப்பில் கட்டிக்கொண்டு போகவேண்டும். இப்போது நம்மவர் மேற்றிசையைப்பார்த்துச் சூடு போட்டுக்கொண்டதால் அவர்கள்போல் நாமும் எப்போதும் சட்டை போட்டுக்கொள்ள ஆரம்பித்து உண்ணும்போதும் தேவனையும் பெரியோரையும் தரிசிக்கும்போதும் கழட்டாமல் வைத்துக்கொண்டோம். நமக்கு குல்லாய் எதற்கு. போடுகிற ஜாதி தனியாய் இருக்க இப்போது எல்லோரும் குல்லாய் தரிக்க ஆரம்பித்ததால் யாரைப்பார்த்தாலும் ஆண்ஜாதி பெண்ஜாதி என்று இரு பிரிவுதான் கண்டுகொள்ள நேருகிறதேதவிற விசேஷமாய் என்ன இனத்தான் என்று கண்டுகளிக்க இடமில்லை. இன்னொரு பலமான மேற்றிசைச் சூடுபோட்டுக்கொண்டோம். கோடைகாலத்தில் விடுமுறை விட்டதும் பணவரும்படியுள்ள கனவான்கள் மலைவாஸத்திற்குப் போகிறார்கள். அங்கு தன் இனத்தார்களுடன் செல்வதால் அனியாயமாய் அனாவசியமாய் ஆகும் செலவு எவ்வளவு? சிந்தித்துப்பாருங்கள். இச்செலவு செய்யவேண்டியது நமக்கு அவசியமா? அச்சமயம் அவர்கள் இங்கிருந்தால் தேகத்திற்கு மிகுந்த கெடுதி உண்டாய்விடுமா? அவ்விதமானால் மிதமிஞ்சி வரும்படி இல்லாதவர்கள் போகவில்லையே? அவர்களெல்லோருக்கும் அக்கெடுதி வருகிறதா? இவ்விதம் எதற்காகச் செய்யவேண்டும்? வெள்ளைக்காரர்கள் போகிறார்கள், நாமும் போனால் நமக்கு அந்தஸ்தும் அவர்களது பரிசயமும் அதன்மூலம் கௌரவங்களும் மேற்படுமென்ற எண்ணம்தவிற வேறுண்டோ? அங்கு போகிறவர்கள் தன் வருணதர்மத்தைச் சிந்திக்கவாவது முடியுமா? மேற்றிசையார்கள் கோடைகாலத்தில் அங்கு போகவேண்டியது உசி

தம். ஏனெனில் அவர்களுக்கு குளிரே வேண்டியிருக்கிறது. சென்ற வருடத்தில் தாங்கவொண்ணாவெப்பத்தால் சென்னைமுதலியவிடங்களில் பல வெள்ளையர்கள் உயிர்துறந்தனர் என்று பத்திரிகைகளில் வந்த விஷயத்தைக் கவனித்திருக்கலாம். ஆகவே நாளடைவில் நாம் அந்த மோகத்தை நிவர்த்திக்க வழிதேட வேண்டும்.

நாம் கள்ளுக்கடை மறியலைச் செய்யுமுன் நாமே சற்று சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டும். அக்குடியைக் காட்டிலும் காபிக்குடி மிகக்கெடுதி என்று விஸ்தாரமாய் முன் இப்பத்திரிகையில் வரைந்துள்ளேன். காபிக்குடி டீ கோகோ ஒவல்டின்முதலிய பாழான குடிகளைப் படித்துள்ள நாம் விலகிக்கொண்டு படியாத ஜனங்களிடம் அக்குடியை ஒழிக்க உபதேசம்செய்தால் விசேஷப் பயனளிக்குமென்பது பலரது அபிப்பிராயம். இதை நாம் நிறுத்திவிட்டால் எவ்வளவுக்ஷேமம்வருமென்பதை ஆலோசித்துப்பாருங்கள், கடும் வேலை உழைக்கும் அவர்கள் குடிப்பதால் அவர்கள் சிரமம் நீங்குகிறதென்றும் மறுபடியும் அவ்வேலையைச்செய்யமுன் வருவதால் அவர்களுக்கு ஒருவாறு பலனளிக்கிறதென்றாவது அவர்கள் கூறக்கூடும். நம் குடிக்கு என்ன பலன் சொல்லுவீர்கள். ஆகவே இச்சீர்திருத்தத்திற்கு நாம் முன் நிற்கவேண்டும்.

மற்று நம் தேசஸ்வபாவம் வேறு, அத்தேசஸ்வபாவம்வேறு. நம் தேசம் ஈசுவரபக்தி விசேஷமாய் அடைந்தது. நம் தேசம் ஈசனின் பார்வையில் இருக்கிறது. நம் தேசத்தில் பஞ்சம் முதலியன நேர்ந்தால் நாம் ஈசுவரனைத்தான் பிரார்த்திப்பதுவழக்கம். வியாதி வந்தால் முதலில் தெய்வத்தைத்தான் பிரார்த்திப்போம். சுகம் வந்தால் தைவானுக்கிரகமென்போம், துக்கம் நேரிடின் தைவவசம்தான். அத்தகைய பாபத்தைச் செய்தேன் என்று அலறுவோம். இவ்விதம் எல்லாவற்றிற்கும் தைவத்தையே நாம் எண்ணுவோம். இவ்விதம் மற்ற தேசத்தவர் எண்ணுவதே இல்லை. ஆகவே இது தைவதேசமெனலாம். ஆதலால்தான் இங்கு சமஸ்த சுகமும் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய இத்தேசம் சீர்குலைந்த நிலையில் வந்துவிட்டதென்றால் இதை முன்னுக்குக்கொண்டுவர தைவத்தை வழிபடவேண்டும். அவ்விதம் நாம் செய்கிறோமா? தைவமென்றும் அதைத்தொழுவதென்றும் ஒருஜாதியார் பிழைப்புக்காக ஏற்படுத்திவிட்டார்கள். அதை நம்பி மோசம் போக

வேண்டாமென்று நம்முன் ஓர் கக்ஷி கிளம்பிவிட்டது. நாமும் புதுப்படிப்பால் தைவக்கதையை மறந்தோம். இவ்வாபத்தில் தைவத்தையேவழிபடவேண்டியிருக்க அதை முழுமையும்மறந்து உலகம் கெட்டுவிட்டதென்று உபதேசிப்பவர்களையே தைவ மென்றோ அதற்கும் மேலென்றோ எண்ணி அவர்களைத்துதிக்கும் வழியில் ஈடுபட்டோம். அவர்களாவது தைவமென்றும் மத மென்றும் நினைக்கிறார்களா? அதுவும் இல்லை, ஹிரண்யகசிபுராஜ்ய மாய் இருக்கிறது. இதெல்லாம் நம்தேச வியாதியைப் போக்க வல்லதென்று நம் பிராசீனவழியில் நாம் நடந்தால் நம்மைக்கண்டு அன்யதேசத்தார்கள்தானே இரக்கம்கொள்வார்கள்.

புகையிலையின் உபயோகத்தை நாம் எவ்வளவு உயர்த்திவிட்டோம். சிறு பிள்ளைகளை புகையிலை பொடி போடாதீர்களென்று உபதேசிப்பார்யாராவதுண்டோ? ஆங்கிலஉயர்தரக்கலாசாலைக்குப் பக்கத்தில் ஒருவன் பட்டணம்பொடி, வெற்றிலைப்பாக்குப் புகையிலை சோடாவியாபாரக்கடை வைக்கிறான். அவன் பாம லாபத்தையே அடைகிறான். இது கெட்ட பழக்கமல்லவோ? இதை நிறுத்த ஆங்கிலஉபாத்தியாயர்களுக்கு சக்தியில்லை, ரூலும் இல்லை, நம் முன்னோர்கள் இத்தகைய வித்தியார்த்திகளை அடக்கியே போடுவார்கள்.

நாட்டுச் சர்க்கரை ஏராளமாயிருக்க ஆஸ்கா என்ற வெள்ளைச் சர்க்கரை வாங்கவேண்டாமென்று கட்டுப்பாடு செய்யுங்கள். நம் காலுக்கு நம் தேசத்தில் செய்யும் செருப்புகளே போதும். அன்ய தேசத்து அழகியதோலால் செய்யப்பட்ட பூட்ஸ், செருப்பு முத லியன வேண்டாமென்று சொல்லுங்கள். அழகாய் வெளியிற் செல்லக் கையிலேந்துங்கழி அன்யதேசத்தார் செய்த இரும்புக் கழியை தரிப்பதைவிட பிரம்புத்தடி, மூங்கில் தடி அழகாயிருக்கு மென்று உபதேசியுங்கள். கண்ணைக்கெடுத்துக்கொண்டு பால்யத் திலேயே போடும் கண்ணாடி நம் தேசக் கம்பி போட்டுக்கட்டி னதே போதுமென்று கூறுங்கள். கண்ணைக் கெடுக்கக்கூடிய அதிக் வெளிச்சமான எலக்ட்ரிலைட் வேண்டாமென்று நம் பிராசீன விளக்கை உபயோகியுங்கள். சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக் களை மிதமிஞ்சி உபயோகப்படுத்தாமலிருக்கவழிதேடுங்கள். வியா திக்கு நம் வைத்தியர்கள் மூலம் ஸ்வஸ்தத்தைத் தேட வழிபாருங்

கள். இவ்விதம் செய்வதெல்லாம் ராஜாங்க துரோகமாகாது. கள்ளுக்கடை மறியலும் அன்ய ஆடை மறியலும் வேண்டாம் என்றெல்லாம் தான் வைதிகர்கள் நினைக்கிறார்கள். இவ்விதம் செய்து கொண்டு அவரவர்கள் இஷ்டதேவதையை வழிபட்டுவந்தால் நம் இஷ்டம் ஏன் கைகூடாது. என்றும் கூறுகிறார்கள். ஆகவே லௌகிகர்கள் இதன் ஸாரத்தையும் கவனித்து இவர்களதுவாதத்தைப் பொருட்டாய் ஏற்று வட்டமேஜைக்கூட்டட்திலும் தைவத்தன்மைபொருந்தியதேசம்நம்தேசமென்பதைஞாபகத்தில்வைத்து இதற்கு மரியாதை கொடுத்தால் இந்தியாவுக்கு க்ஷேமம்உண்டாவதில் தடையில்லை. இல்லையென்று இதை உதறிவிட்டு தன்மனம் போனபடி தீர்மானம் செய்துவந்தால் நாம் அன்யோன்யமாய் வாழமுடியுமோவென்பது யோசித்துத்தான் கூறவேண்டும். சில லௌகிகப் பெரியோர்கள் தவிற 100-க்கு 98 பெயர்கள் மதத்திற்காக உயிரையிழக்கத் தாயாராயிருப்பார்கள். ஆகவே இதை வளர்ப்பதில் பயனில்லை. புத்திமான்களிதைநன்குயோஜித்து மிகச் சிக்கலான இக்காலத்தில் வெகுகாலம் சாசுவதமான வழியைத்தேடவேண்டுமே தவிற ஏதோ நம் சாமர்த்தியத்தால் செய்துவிட்டோமென்று எண்ணுவதற்கு இது சமயமல்ல என்பதற்காகமட்டிலும் இவ்வளவு கூறினேன். ஆகவே தேசத்தின் க்ஷேமத்தை தேட ஈசனை மனதில் இறுத்திக்கொண்டு முன் வாருங்கள். நம் தேசம் பூகம்பத்தால் அடிக்கடி சேதத்திற்குள்ளாகாதது. நம் மலை எரிமலைகளல்ல நம் தேசத்தில் அடிக்கடி புயல்காற்றுஅடிக்காது. நம் தேசத்தில் சமுத்திரம் பொங்கி நாடுகளை அழிக்காது. நம் தேசத்தில் பனிக்கட்டி கட்டியாய்ப் பெய்து தேசத்தை மூழ்கடிக்கவில்லை. நம் தேசத்தில் உஷ்ணக்காற்றென்று கொடுங்காற்று அடிக்கவில்லை. நம் தேசத்தில ஏராளமான மில்களேற்பட்டு லக்ஷக்கணக்கான வேலைக்காரர்கள் வேலை செய்யாமல் கட்டுப்பாடுடன் கூட்டங்கூட்டமாய்க்கிளம்பி ஜனங்களுக்கு பயத்தைக்கொடுக்க வேண்டாம். நம் தேசம் ஆசையை வளர்ப்பதல்ல. இருப்பதைக்கொண்டு தைவம் கொடுத்ததுநமக்குஇவ்வளவுதானென்று எல்லோரையும் சாந்தப்படுத்தும் ஸ்வபாவமுள்ளது. ஒருவனுடைய தொழிலை மற்றவன் செய்வது மிகப்பாவமென்று தன்தன் வேலையில் ஈடுபடும் தேசம். நம் தேசம் ஈசனுடைய அந்தரங்க தேசம் இது.

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जना:
यत्कर्माचरितं मया च भवत: प्रीत्यै भवत्येव तत् ।
शंभो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥

ஓ சிவனே ! நீ உன் விளையாட்டிற்காக உலகத்தைசிருஷ்டிக்கிறாய், ஜனங்களெல்லாம் உனக்கு விளையாட்டு மிருங்கள். ஆகவே நான் என்னென்ன கன்மாவைச் செய்கிறேனோ அது உன் பிரீதியாக ஆகும். என் நடத்தையெல்லாம் உன் சந்தோஷத்திற்காகவே ஏற்படுமாதலால் நீஎன்னை ரக்ஷிக்கக்கடைமைப்பட்டுத்தான் இருக்கிறாய் என்ற பகவத்பாதாவர்கள் கூறிய சுலோகத்தைப் பாராயணம் செய்துகொண்டு **शंभोजय रामजय कृष्णजय** என்று ஜயகோஷம் முழங்கிக்கொண்டிருந்தால் நாமும் கடைத்தேறலாம். நம் நாடுசெழிக்கும். நம் சந்ததி வளரும். கஷ்டங்கள் விலகுமென்பது வைதிகோத்தமர்களது தீர்மானம். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.